உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ரு	சுக்கில—ஆடி	மலர் ச

உ

கலித்தொகையும் நச்சினார்க்கினியரும்.

திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
சலகண்டபுரம்.

நமது தமிழ்மொழித்தேவி தனியரசுபுரிந்து விளங்கிய பண்டைக்காலத்தே, கடைச்சங்கத்து நல்லிசைப்புலவர்கள் இயற்றிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கென மூவகையாக விதந்தோதப்பெறும் அரும்பெறல் நூற்களுள் இடைநின்ற எட்டுத்தொகையில் ஆறுவதாக நாட்டப்பெற்ற "கற்றறிந்தோ ரேத்துங் கலி" எனப் பாராட்டப்படும் இன்ப முழுநூலும் ஒன்றும். இஃது முற்றும் கலிப்பாக்களான் இயன்று பல புலவர் பெருமக்கள் இயற்றினவற்றைத் தொகுத்த தொன்று கலின் "கலித்தொகை" எனப்பெயர்பெற்றது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் திணைப்பகுதிகளின் உரிப் பொருட்களாகிய பிரிவு, கூடல், ஊடல், இருத்தல், இரங்கல்

என்னும் ஐவகை இன்பப்பகுதிகளும் மிகவிளக்கமாக நேரிற் பெற்றுத் துய்த்தாற்போல் புலப்பட்டு மனமுருகும் வண்ணம் அங்கை நெல்லிக்கனியெனக் கற்போர் காமுற்றுப் பன்முறை பயின்று சுவைக்கினும் தெவிட்டாத் தெள்ளமுதவூற்ருக மாருது சுரந்துபெருகும் இன்பச்சுவைச் சிறப்புவாய்ந்தது. ஈடுமெடுப்புமில்லாத ஒண்டீந்தமிழின் இன்பக்களஞ்சியமோ! இன்பத்தின் உயிர்நிலைநாடியோ! பழந்தமிழர்களின் இல்லறக் காதற்பெருமையுணர்த்தும் ஓவியவுருக்களோ! அன்றிப்பண்டைப்புலவர் அறிவாற் கண்டு வரம்புகட்டிய காமக்கடலின் முடிந்தமுடிபோ! எனப்பலபட வியந்து பாராட்டினும் மிகையாகாத மெய்ம்மை சான்றது. எவ்விடத்தும் இயற்கைப் பொருள்களையே உவமமாகக் காட்டிப் பலவகை நீதிகளைப் போதிக்கும் செப்பம் பொருந்தியது. மிகத் திட்பநுட்பஞ்செறிந்த பொருட்களும் அவற்றை இனிது விளங்கவுணர்த்தும் செவ்விய இனிய திறம்மிகும் சொற்களும் செய்யுட்களின் இன்னோசையும் அணியின் பெருமிதமும் ஒன்றினொன்று விழுமியவாய்த் தெய்வ இயற்கையாய்ச் சேர்ந்தனவோ எனப் புகழும்வண்ணம் திகழ்வது. பிற்காலத்து எழுந்த எந்நூற்களினும் கதைப்போக்கில் ஒரோவழித் தோன்றும் இன்பத்தோற்றம் போலாது யாதோர் கதைத்தொடர்பு மின்றியே, தலைவன், தலைவி என்னும் இருபாலாரையும் குறிக்கொண்டு அவர்கள் அகக்கருத்தையும் வெளிச்செய்கையையும் வாய்மொழியையும் இன்பச்சுவைக்கே பொருத்தி முற்ற முடித்த காமநூலாக விளங்குவது. தமிழ்ச் சங்கத்தேர்ச்சி குறித்து எம்மிடம் இந்நூல் பயிலவந்த சில மாணுக்கர்கட்குப் பாடம் கூறியபோதெல்லாம் இந்நூலை நன்கு கவனித்தும் உரையாசிரியர் சிற்சில இடங்களில் காட்டியிருக்கும் பேரறிவின் திறத்தைப் பல்கால் வியந்தும் யாம் கண்டவற்றைக் குறித்த குறிப்புக்களை நமது பொழிலில், ஆவல்பற்றி வெளியிடத் துணிந்தேம். இதனைக் கண்ணுறும் கற்ருேர் தவறுபாடுகளை எடுத்துக் காட்டுவார்களாயின் நன்றிகூறி மேற்கொள்வேம்.

யாம் அறிந்தவரையில், தன்னேரில்லாத் தனிப்பேரின்பம் ஓவாது சுரக்கும் ஒண்டமிழ்ப் பெருநூல் இதனினும் பிறி

தில்லை யென்பேம். எமது உட்கிடைக்கு உடம்பாடாகப் பண்டை நூற் புலவர்பெரியார் ஒருவரும்,

"திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேண் மாக்கதையோ கொள்ளேம் நணியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்"

"தமிழிற் றலைசிறந்து விளங்கும் அரும்பெரு நூற்களாகிய சிந்தாமணி, கம்ப இராமாயணம், திருக்குறள், பெருங்கதை முதலியவற்றையும் மதியேம். கலித்தொகையின் இன்பப்பெருக்கிலேயே திளைப்பேம்" என மொழிந்துள்ளார். தமிழ்ப் புலவர்களின் நல்வினைப்பயனால் இன்பவிருந்தாக எதிர்ந்த இத்திப்பிய நூற்கு உரைவகுத்தார் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் பெருமான். ஓர் சிறந்த நூலுக்கு உரைகாண்போரும் இலக்கிய இலக்கணப் பெரும்புலமையால் வடிக்கப்பட்ட கூர்த்த பேறறிவாளராக வாய்ப்பது மிகவும் அருமையே. மாற்றுயர்ந்த பொன்தகட்டில் மாணிக்கம் பதித்தாற்போலும், வள்ளற்றன்மை வாய்ந்தார்க்குப் பெருநிதிவைப்பு நேர்ந்தாற்போலும், கற்புமிக்க காரிகைக்கு நற்குணவழகன் தலைப்பட்டாற்போலும் இந்நூற்கு அவர் உரையாசிரியராக வாய்த்தது பெரிதும் மகிழ்ந்து பாராட்டற்குரியதே. இந்நூலை முதற்கண் அச்சிட்ட பதிப்பாசிரியர்,* நல்லந்துவனாரலேயே இந்நூல் முழுவதும் இயற்றப்பட்டதெனச் சிலமேற்கோள் காட்டுகின்றாரெனினும் பலபுலவர்களின் செய்யுட்களைக் கூட்டித்திரட்டித் தொகையெனப் பெயர்தந்துள்ள நூற்களின் வரிசையில் இஃதும் சேர்த்தப்பட்டிருத்தலானும் நூலின் 'இறுதியில்......இம்முறையே கோத்தார் நல்லந்துவனா' ரெனக் குறிப்புக் காணப்படலானும்,

பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

---

* பதிப்பாசிரியர் திருவாளர். சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்.

என்னும் பழஞ்செய்யுள் சான்று பகாலானும், இத்தொகை, பல புலவர் செய்த பாடற்றொகையே என்பதில் ஐயமின்று. இதனைக் கோத்த நல்லந்துவனாரே இறுதிக்கண்ணதாகிய நெய்தற்கலியை இயற்றினார்*. பண்டைக்காலத்து நல்லிசைப் புலவர் தம்காட்சி கருத்து வகைகளாற்கொண்டு புனைந்துரைக்கும் நாடக வழக்கத்தையும் உண்மை செப்பும் உலகியல் வழக்கங்களையும் பாடுதற்குரிய புலனெறி வழக்கம் கலிப்பாவானும் பரிபாடலானும் பாடுதற்குரித்து என்னும் விதியுண்டு.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரியதாகு மென்மனார் புலவர்.

(தொல்காப்பியம். அகத்திணை—53)

அற்றேல் உலகஇன்பம், என்றும் நிலையுடைத்தன்றாய் ஆன்றோராற் கடியப்பட்ட கீழ்ஒழுக்கமாதலின், அதனைப் பாரித்தோதல் அறிவுடைப் புலவர்க்காகாதெனின் :—நன்று சொன்னாய்; காமவின்பத்தை முறைப்படித் துய்க்குங்கால், இடையிடையே தோன்றும் பிரிவுத்துன்பம், இளமை நீக்கம், உள்ளத்திரிவு, முதுமைச்செறிவு, இறப்பச்சம், அறிவோர் நல்லுரை முதலியவைகளால் அவ்வின்பத்தில் உவர்ப்புத் தலைப்பட்டு என்றும் மாறாப் பேரின்பத்தின் விழைவுமிக்கு இறைவன் பொன்னடிகட்கு அவ்வன்பைச் செலுத்த மாறாத உறுதிப்பாடு நிகழுமாதலின் இதன் பயனே வீடுபேறு நாடிச் செல்லற்குத் துணையாகும். அதனாற் பொருந்துமென்க.

* நெய்தற்கலி 25. "புரிவுண்ட" என்னுங்கலி உரையில் "...... சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவுதோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட்செய்தார்" என்பதனால் அறிக.

இக்கருத்தையே ஆசிரியர் தொல்காப்பியனார்

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' (தொல்.

என விளக்கினார். [கற்பியல் 51)

நூலின் பெருமையையும் உரையாசிரியரின் அருமையையும் பற்றிச் சில கூறினும். இனி எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப நூலாசிரியரின் சொல்வளம் கருத்துவளங்களையும் ஒருவாறு விளங்கியும் விளங்காமலும் ஐயுறுமிடங்களிலோ, பொதுவாகப் பொருள்தரும் இடங்களிலோ, ஆற்றொழுக்காகப் பொருள் செல்லும் இடங்களிலோ, மிக அருமையாக மேம்பட்ட கருத்துக்களைத் தந்து புணர்த்தி எற்றபெற்றி சொற்கிடக்கைகளை மாற்றி நுனித்தாராய்ந்து "ஆம் ஆம், நன்று நன்று; அரிதரிது," எனக் கற்போர் தம்மோடு தாமே பேசிக்கொள்ளும் வண்ணம் உரையாசிரியர் உரைகூறிச் செல்லும் பேரறிவின் பெருமையும் நமது சிறுபுன்மதிக்குத் தட்டுப்பட்ட வளவு நாடியறிந்து சுவைக்கப் புகுவோமாக.

(க) கடவுள் வாழ்த்து.

ஆறறி யந்தணர்க் கருமறை பலப்கர்ந்து
தேறு நீர்ச் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறுமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி.

இத்தாவினுள், தேறுநீர் = கங்கை, தேறல் = தெளிவுறல். தெளிந்த நீராகிய கங்கையென எம்போன்றார் பொருள்காண்பர். நம் உரையாசிரியரோ அத்தெளிதலை வேறோர் தெளிவின்பாற் படுத்துச் சிவபெருமானுக்கு ஏற்றங்கூறுகின்றார். கடவுளின் பெருமைகளை நினைவு கூர்தல் அவர்பால் அன்புபெருகற்குத்தக்க காரணமாதலின், தெளிவைக் கங்கை நீரின்மேல் ஏற்றுவதினும், இறைவன் ஆற்றலின்பாற் சார்த்துதல் தகுதியும் பெருமையும் உடைத்தாமென்னுங் கருத்துக்கொண்டு முன்னரே பகை என்று

தாம் தெளிந்த கங்கையின் வேகத்தைச் சடையின் ஒரு கூற்றிலே (தலைகாட்டாதவாறு) அடக்கி எனக் கூறுகின்றார். பகீரதனால் வேண்டப்பட்டு நிலவுலகம் புகுதற்குத் தன் வேகத்தை ஆற்றுநர் இல்லையென்று மொழிந்து சென்ற கங்கையைச் சிறுமைகூர அடக்க முற்பட்டுநின்ற இறைவன், அதன் வேகத்தை நன்கறிந்தே சடைக்கற்றையை விரித்து ஒருகூற்றிலே மறையச் செய்தனர் என அவரது பேரறிவும் பேரருளும் பேராற்றலும் ஒருங்கு வெளிப்படுத்தலின் இப்பொருளே சீரியதாயிற்று.

"கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி" என்னுந் தொடர்க்கு இறைவன் கூறுமுன்னமே முகநிலையாற் குறிப் புணர்ந்து அவர் கருதிய தொழின்மேற் செல்லும் வேகத்தை யுடைய கூளி எனப் பொருள் கொள்ளாது, செல்லும் என்னும் எச்சத்தைக் கூளிக்கேற்றுமாறு சொற்கிடப்பதையும் விலக்கி, எண்ணையாய் எனவரும் பெயர்க்குப் பொருத்தி, கூறாமல் = வாக்குக்கு எட்டாமலும், குறித்தன்மேல் செல்லும் = மனத்தாற் குறிக்கும் குறிப்புக்கும் எட்டாமலும் அகன்று மேற்செல்லும் (கூளிப்போரையும் மணிமிடற்றையும் எட்டுக் கையிணையும்) உடையாய்! எனக் கூட்டுவகூட்டிப் புணர்ந்து, தமது கூற்றாக, "இது திருமேனிகொண்டு நின்றாயாயினும் வாக்குக்கும் மனத் துக்கும் எட்டாய் என்றது" எனக் கூறிச்செல்வது வியக்கத்தக்க அவரது கல்வித்திறமையை விளக்குகின்றது.

செய்யுள்-ந (தரவு)

"அறனின்றி யயறாற்று மம்பலை நாணியும்
வறனீந்தி நீசெல்லும் நீளிடை நினைப்பவும்
இறைநில்லா வளையோட விதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயொடு புல்லென்ற நுதலிவள்..."

தலைவனது பிரிவாற்றாத் தலைவியினிலைமையைத் தோழி தலைவற்குக் கூறுகின்றாள். இதில் 'இதழ் சோர்பு பனிமல்க' என்னுந் தொடர்க்கு, தலைவியின் 'கண் இதழ்களில் உதிர்ந்து கண்ணீர் பெருக்கெடுப்ப' என யாமும் எம்போன்ற இக்காலப் புலவரும் மேற்போக்காக உரை கூறிச் செல்வோம். நமது உரையாசிரியர் பெருமானார், 'கண்ணீர் இமையினின்று முன்னர்ப் பெருக

வீழ்ந்து பின்னர் இமை நிறையும்படி நிற்க' என அருமைப்பாடு தோன்ற, அழுகின்றவரை நேரிற் காட்டுவார்போற் காட்டிச் செல்கின்றார். கண்களினின்றும் பெருகி முலையின் முற்றத்தே உதிர்ந்த நீர்கள் உதிர, மீட்டும் உதிர்வதற்குக் கண்ணிமைகள் நீரைப் பெருகவைத்துக் கொண்டிருக்கின்றன என்று குறிக்கும் அவரது பேரறிவின் நுணுக்கம் எத்தகையது! இப்பொருள் தரும் வண்ணம் அவர் பனி சோர்பு, இதழ் மல்க, எனச் சொற்களின் நிலை பிரித்து மேதகக் கூட்டிய திறமை நம்மறிவைக் கொள்ளை கொள்ளவல்லதன்றோ!

"கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன"

தோழி தலைவனை நோக்கி நீ செல்லும் கானத்தில் காணும் இயற்கைப் பொருட்களே நின்னைத் தடுக்கும் தன்மையை உடையன எனக் கூறிச் செலவழுங்குவிக்கின்றாள். (அதாவது போவதை மாற்றுவிக்கின்றாள்).

நீ போகும் கானத்தே நீரற்ற பாழ்ஞ்சுனையில் இலையோடே அழகிய மலர்கள் வாடிக்கிடப்பன. அவையே நின்னைத்தடுப்பன வாம் என்று, இவ்வடிக்கீழ்க் குறிப்பாக, "என்றதனுன் இவளே யன்றிச் சுற்றத்தாரும் கெடுவர் என்றாள்" எனக் கூறுகின்றார். நீரின்றேல் மலர்வாடும்; அம்மலர் வாடும்போது தன்னைத் தாங்கி நிற்கும் பல இலையோடும் வாடும். அதுபோல நின் தழுவுதல் பெறுமல் இவள் வாடும்போது இவளால் உயிர் தாங்கி நிற்கும் இவள் சுற்றத்தார் பலரும் கெடுவர், அப்பாவம் நின்னைப் பெரிதும் சுற்றும் என்பது கருத்து என விளங்க வைக்கின்றார். கூர்ந்து நோக்கினல்லது மலர் இலைகள் சுற்றத்தாரைப் பொருவும் என்பது நமக்கு விளங்காதன்றோ! நீர், தலைவிக்கிணை.

"செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன"

இதற்குக் குறிப்பு "மரம் தலைவியும் கொடி சுற்றமுமாகக் கூறினள். மரத்தினது நிழலின் நிற்றலிற் கொடி மரம்வாடும் அளவும்

நின்றது" எனக் குறித்தார். தனக்காதரவாய் நின்றதோர் மரம் பட்டதாக அதனைத் தழுவித் தழைத்திருந்த பூங்கொடி அம்மரத்தின் சார்பு நெகிழ நீங்கிக் கீழ் வீழ்ந்து கிடந்தவை, நின்னைப் பிரிந்த நின் தலைவியும் சுற்றமும் இங்ஙனமாகின்றார் என்றுணர்த்துங் குறிப்பால் நினது போக்கைத் தடுப்பன காண்டி, எனத்தோழி கூறுகின்றாள். தலைவியைச் சுற்றத்தார் தழுவி அவள் வாழ்க்கையால் தாமும் வாழ்வாரா யிருந்தவர் பின் அவள் ஆற்றொணாத் துன்பத்தால் வாடுதல்கண்டு தாமும் வாடுவர் என விளக்க, மரம் தலைவி, கொடி சுற்றம் எனச்சுட்டினர். முதற்கண் மரம் வாடலைக்கூறிப் பின்னர்க் கொடிவாடலை யுணர்த்தியதற்குக் காரணம் காட்டுகின்றார் மரத்தின்நிழலில் நின்றதனால் மரம் வாடும் அளவும் கொடிநின்றது என. இதனால் தலைவி துன்பமிக்கு இறந்துபடும்காறு மிருந்து பின்னரே சுற்றத்தாரும் படுவர் என்பது தோன்றிற்று.

துணிபுநீ செலக்கண்ட வாற்றிடை யம்மரத்
தணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன.

இவ்வடிகளின் குறிப்பாக "முற்படக்கூறிய நீரும் மலரும், மாமுங் கொடியும் போலப் பற்றுக்கோ டாதலின்றி, இவளும் சுற்றமும் முதலுஞ் சினையுமாய் இருப்பர் என்றதாயிற்று" எனக் கூறுகின்றார்.

முன்கூறிய தாழிசைகள் மூன்றினும் காட்டியபொருள்களை ஒருங்கெண்ணி முடிவு கட்டுகின்றார்.

நீரும் மலரும், தலைவியும் அவள் சுற்றமும், நீர் பெருகுந்தோறும் மலர் செழிப்புற்றுக் குறையின் வாடுதலின்; மரமும் கொடியும் தலைவியும் அவள்சுற்றமும்; மரத்தைத்தழுவிக் கொடிகள் தழைத்து மரங்கெட அவையும் கேடுறுதலின். இவ்விரண்டு பொருள்களும், முறையே தலைவியின் இன்றியமையாமையையும், தலைவியைத் தழுவிப்பேணும் காதற்சிறப்பையும் சாற்றுவன ஆயினும், நீர் மலரினும் மரம் கொடியினும் வேறாதலின், தலைவியும் அவள் காதற்சுற்றமும் வேறுவரோ என்று நினையாதே;

அவர்கள் ஓர் பொருளின் வெவ்வேறுருப்புப்போல் ஒன்றுபட்டவர்களே எனத் துணிவுறுத்தற்கு மூன்றாவதாக மரம்வாட அதன் தளிரும் வாடுதல் நின்செலவைத் தடுக்கும் எனக்கூறிய தென்று விளக்குகின்றார். "முதலிவை சினையிவை யெனவேறுளவில" என்றதனால் தலைவியே சுற்றம், சுற்றமே தலைவி, ஒருவரின் ஒருவர் வேறல்லர் என ஒற்றுமை காட்டப்பட்டது.

செய்யுள் 5. இதுவும் தோழி தலைவனைச் செலவழுங்குவித்தது; போதற்கு நாளுங்கோளும் நன்றல வென்கின்றாள்.

"நாளுங் கோண்மீன் றகைத்தலுந் தகைமே". என்ற அடிக்குப் பொருள்கூறவந்தவர், நாள்மீனும் கோளும், எனக் கண்ணழித்துச் சொற்கிடக்கையை மாற்றி, நின்னை நாண்மீனும் (அதாவது நட்சத்திரங்களும்) கோளும்-மனத்தாற் குறித்துக் கொள்ளப்படும் புள்ளும் தடுத்தலையும் செய்யும் என மொழிந்து, 'குறித்துக்கொள்ளப்படுதலிற் கோள் என்றது ஆகுபெயர்.' எனத் தனது நாட்டிச்செல்கின்றார். வழிச்செலவில் நாள் பார்ப்பதினும் சகுனம் பார்த்தல் பெருவழக்காதலின், கோண்மீன் என்று பொருள் கோடலினும் புட்சகுனம் எனக்கோடல் சிறந்தது. அன்றியும் நாள் என்ற துணையானே கோளும் அடங்குதலின் அது மீண்டும் கூறவேண்டா என நுனித்துணர்ந்தன்றே வலிந்து புட்சகுனத்தைப் புகுத்துகின்றார். இங்ஙனம் தங்கருத்திற்கேற்பச் சொற்களை முன்பின்மாற்றிச் சீரியதோர் பொருள்காட்டும் இவர் தம்துணிவும் மதிநுட்பமும் பலவிடங்களிற் பெருகக்காணலாம்.

செய்யுள்—8.

"மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாளும்
திருவினுந் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ......"

இத்தாழிசையில், தலைவன் பொருண்மேற்செல்லும் செலவை அதன் இழிவுகூறித் தோழி மறுக்கின்றாள். திருமகள், தன்னைப் பெற்றாரைப் பிறர்இகழும்படி விட்டுநீங்குதல்போல் நிலையற்ற பொருளை அறிவுடையோர் விரும்பா ரென்றுகூறிவந்தவர்,

இதனுள், 'கொண்டக்காற் போலாது' என்றதொடர்க்கு அத்திரு தான் வருதற்குமுன்பு அவர் நின்றநிலைமையையும் கெடுத்துப் போமென்னும் நிலையிற்று என்று குறிப்பெழுதுகின்றார். செல்வம்பெற்றா னொருவனுக்கு, அச்செல்வம் போங்காலத்து அதனைப்பெறுமுன் அவற்கிருந்த எளியநிலையின் சிறிய மதிப்பையும் அறத்தொலைத்துச் செல்லும் என உய்த்துணர்ந்துரைக்கின்றார். இது அவரது உலகியல் அறிவின் மிகுதியை நன்கு விளக்குவதாம். என்னை? எளியவனொருவன் தன் இயற்கையே அஃதாகப்பிறராற் கொள்ளப்பட்டு வினை அவனது பண்புகளால் ஒருவாறு மதிப்படைந்திருப்பன். அவனுக்குச் சிறந்தசெல்வம் திரண்டுசேர்ந்து சின்னாள் கழிந்தபின் ஒருங்கே ஒழியின் "காணாதகண்டான் செய்யாதன செய்தழித்தான் இவனோர் அறிவிலி" எனப் பலநும் எள்ளி நகையாடுவரன்றே! அச்செல்வப் பேற்றினும் பெருமையே நன்றாமன்றோ? இது 'புதுவெள்ளம் வந்து பழையவெள்ளத்தையும் போக்கிற்று' என்னும் பழமொழிக்கிலக்காகும் என்க. இவ்வாறு உரையாசிரியர் கூறும் கூற்று நிற்க, இச்செய்யுளில் நூலாசிரியரின் கவித்திறத்தையும் ஆழ்ந்து காண்பாம். பொருளின் நிலையாமைக்கு மூன்று தாழிசைகளிலும் சிறந்த மூன்று பொருள்களைக் காட்டாக்குகின்றார். அவை:—

(1) விரலாலே ஒலிக்கும் நரம்புகள் எழும் பயன்கெட, தானக்கோலின் அகப்பட்டு இடைநின்ற நரம்பு அற்றுக்கிடந்த யாழைப் பார்க்கினும் நிலைபேறில்லாத பொருள்.

(2) திருமகள் கண்ணோடாது (இரக்கமின்றி) பிரிதல் போல் நிலைமாறும்பொருள்.

(3) தமக்குரிய பயன் நோக்காது அரசரின் ஆக்கத்திலேயே முயலும் அமைச்சரைச் சினந்து அவர் பொருளையன்றி உயிரையே வௌவும் கொடுங்கோன் மன்னரினும் நிலையில்லாப் பொருள். இம்மூன்று

பொருட்களும் கூறிய கூறலாகாது ஒன்றினென்று சிறப்புற உண்மையை உணர்த்துவனவாம்.

முதற்கண் வீணை ஓசைநன்குவர *இவறி †மாடகம்பற்றி மிகமுறுக்கியவழி நரம்பறுதலால், பின், கருதிமுயன்ற இன்னோசைப்பயனுறுபட்டுக் கையறுதல்போல நீ இவளைப்பிரிந்து பொருளின்மேல் மிகவிருப்புற்றுச் செல்லுவையேல் அப்பொருளால் அடையும்பயனும் பெறாது இவளையுமிழந்து கையற்றுக் கலங்குவாய் என உணர்த்தற்கும்,

இரண்டாவது, திருமகள், காரியமாகிய இன்பத்தை இகழ்ந்து காரணமாகிய பொருளைத்தேர்வுழி அந்நிலையிலாப்பொருள் உடனே நீங்குமியல்பினுல் ஈட்டியும் பயன்படாது கழிய, அதன் பொருட்டுப் பிரிந்த நின் அன்பின்மை தேறி இவளும் உயிர் நீங்க, முன்னுள்ளதூஉமிழந்து தியங்குவை எனத்தெளித்தற்கும்,

மூன்றுவது, அரசன், நின்னையே கருதி நின்பெருக்கத்துக்கே முயல்வாளாகித் தன்னலத்தை அறவே மறந்த தலைவியின் உயிரையே வௌவத் துணிவுறும் நீ முயலும் பொருளும் நிலைப்பதன்று. அதனை நீயும் இன்பத்தோடு துய்க்கப்பெறாய் எனக் குறித்தற்கும் காட்டாம். இங்ஙனம், எடுத்துக்கொண்ட பொருள் மொழியுந்திறம்பட வற்புறுத்தி அழகிய இனிய சீரிய நயம் வாய்ப்பப் பண்டைக்காலப் புலவர்கள்செய்த இவ்வகைச் செய்யுட்கள்போல இற்றைநாட் புலவர்கள் யாவர் செய்யவல்லார்? பொருட் சிறப்பற்ற போலிக்கவிகளை யியற்றுவதைக் கைவிட்டு இத்தகைச் செய்யுட்களின் நயங்களை ஆய்ந்தாய்ந்து களித்துப் பிறர்க்கும் எடுத்துக்காட்டின் அஃது அவர் கல்வித் திறத்தை விளக்காதோ? அதனுற் குறைவுண்டோ? தமிழ்ப்பாவலர் இனியேனும் பண்டை நூற்களின் பயிற்சியைப் பெருமையெனக் கொண்டொழுகுவாராக. மற்றும் நூலாசிரியர், உரையாசிரியர்களின் நற்பேரறிவின் நயங்களை ஆய்ந்து மகிழ்வோமாக.

(தொடரும்.)

---

* இவறி—பேராசைப்பட்டு. † மாடகம்—வீணையின் முறுக்காணி.

உ

உணவு.

திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத்
தமிழ்ப்பண்டிதர், உயர்தரக்கல்லூரி, நான்குநேரி.

முன் மலரில் இத்தலைப்பின்கீழ் நாம் ஏன் உண்ணவேண்டும் என வினவி விடைகண்டாம். இக்கட்டுரையில் நாம் எத்தகைய உணவுகளை உண்ணவேண்டும் என்பதையும், நாம் உண்ணும் உணவு எவ்வாறு அறுகிறது என்பதையும் ஆராய்வாம்.

நாம் உண்ணும் உணவை மூன்று வகையாகப் பிரித்து அறியலாம். அவை க. தோன்றுமிடத்தாலாம் பிரிவு, உ. நிலையாலாம் பிரிவு, ங. அமைப்பாலாம் பிரிவு என்பன. உணவுப் பொருள்கள் தோன்றும் இடத்தால் புலாலுணவு என்றும், காய்கறி உணவு என்றும், உப்புவகை உணவு என்றும் மூன்றுவகையாகப் பகுத்து அறியப்படுகின்றன.

பொருள்கள் மூன்றுவகையான நிலைகளை உடையன. பனிக்கட்டியை எடுத்துப்பார்த்தால் அது கல்லைப்போலக் கட்டியாக வைத்த இடத்தில் இருக்கிறது. அதன்மேல் கொஞ்சம் வெப்பம் பட்டால் அது நீராக உருகிவிடுகிறது. அப்போது அது நீரைப் போல ஓடும் நிலையை அடைகிறது. நீரின் நிலை மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடுவது. அந்நீரின்மேல் மேலும் மேலும் வெப்பம்பட்டால் அது ஆவியாகமாறி விண்ணிற் பறக்கும் நிலையை அடைகிறது. இதனால் தண்ணீரென்ற ஒரே பொருள் வெப்பம் அதிகப்பட்டபோது ஆவி நிலையையும் வெப்பம் குறைந்தபோது கட்டிநிலையையும் அடைகிறது என்பது விளங்குகிறது. இவ்வாறே நமது உணவுப் பொருள்களும் க. கட்டிநிலைப் பொருள்கள் என்றும் உ. நீர்நிலைப்பொருள்கள் என்றும், ங. ஆவிநிலைப் பொருள்கள் என்றும் மூன்றுவகை நிலையால் பகுத்து அறியப்படுகின்றன.

மூன்றுவதாக உணவுப் பொருள்களை அவைகளின் அமைப்பாலும் பிரித்து அறியலாம் என்றேம். நாம் காண்கின்ற பொருள்கள் எல்லாம் க. தனிப்பொருள்கள் என்றும், உ. அவைகளின் சேர்க்கைப் பொருள்கள் என்றும் இரண்டு வகையாம். தனிப்பொருள்களாவன வேறு பிரிக்க முடியாமல் தனிப்பட்ட தன்மையை உடையன. ஆராய்ச்சியாளர் இதுவரை கண்டறிந்த தனிப்பொருள்கள் ஏறக்குறைய எண்பது உள்ளன. நாம் உண்ணும் உணவுப் பொருள்களெல்லாம் நான்கு தனிப்பொருள்களின் சேர்க்கைப் பொருள்களாம். அத்தனிப்பொருள்கள் க. உயிர் ஆவி (Oxygen), உ. நீர் ஆவி (Hydrogen), ங. உப்பு ஆவி (Nitrogen), ச. கரி (Carbon) என்பன. நம் உடம்பில் மேலே கண்ட தனிப்பொருள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவைகளோடு சுண்ணும்பும், தீ முருகலும் (Phosphorus), கந்தகமும், இன்னும் இரும்பு முதலிய சில தனிப்பொருள்களும் சிறுசிறு அளவினவாக அமைந்துள்ளன.

உணவுப் பொருள்கள் புலாலை வளர்ப்பன என்றும், வெப்பமும் வலிமையும் தருவனவென்றும், சமிக்கச் செய்வன என்றும் மூவகையன. கோதுமை, உழுந்து, துவரை, கடலை, மொச்சி, வாதாம் பருப்பு முதலியன புலாலை வளர்ப்பன. இவைகளில் உப்பு ஆவிச்சத்து மிகுதியும் காணப்படும். சர்க்கரையுள்ள பொருள்களும் எண்ணெய்ச்சத்துள்ள பொருள்களும் வெப்பமும் வலிமையும் தருவன. இவைகளில் கரிச்சத்து மிகுதியும் காணப்படும். காய்கறிகள், பழங்கள், தண்ணீர், உப்பு இவை சமித்தலைச் செய்வன. காய்கறிகள் உண்ணுதுபோனல் தோலில் ஓர்வகை நோய் உண்டாகும். அதனல், பல நாட்கள்வரை காய்கறிகளைப் பெறமுடியாத மாலுமிகள் இவைகளுக்குப் பதிலாக எலுமிச்சம் பழத்தைப் பயன்படுத்தி உண்ணுகிருர்கள்.

புலால் உண்ணுவதால் உடல் வலி மிகாது. இவ்வுண்மையை ஆராய்ச்சியாளர் 'ஜப்பானியருக்கும் ரஷ்யருக்கும்' நடந்த போரில் கண்டறிந்தனர். ஜப்பானியர் குறுகிய எண்ணிக்கையினராக இருந்தாலும் தங்களைவிடப் பன்மடங்கு மிகுதியான ரஷ்யரை

வென்றது உடல்வலியினாலேயே. அவர்களுக்கு உடல் வலிமை புலால் உண்ணுமையினாலேயே உண்டாயிற்று. யானை புலால் உண்ணுமையினாலேயே மிக்க ஆற்றல் படைத்திருக்கிறது. இனி, நாம் உண்ணும் உணவு எவ்வாறு சமிக்கப்பெறுகிறது என ஆராய்வோம்.

சீரணம் என்பது ஜீரணம் என வடமொழியாளராலே ஒலிக்கப்பெற்றாலும், இது தமிழ்ச் சொல்லே. இது சீர் அணம் என்ற இரண்டு சொற்களால் அமைந்தது. சீர் என்பது செம்மை; அணம் என்பது அடைதல். அதாவது உணவு செந்நீரோடு கலக்கும் செம்மை நிலையை அடைதல். அணம் என்பது அம் விகுதி பெற்ற தொழிற் பெயர். (அண்—அடை.) அறம், மறம், தருமம் என்பவைகளும் அம் விகுதி பெற்ற தொழிற் பெயர்களே. தருமம் என்பது வடமொழியாளராலே தம் மொழியில் ஆளப் பெற்றாலும் தமிழ் மொழியே. தா என்ற வினைப்பகுதி தொழிற் பெயராகும்போது தருதல் என்றும் தருமம் என்றும் ஆகும். தா என்பது தல் விகுதி சேரும்போது தருதல் என்றும், அம் விகுதி சேரும்போது தருமம் என்றும் ஆகும்.

உணவுப் பொருள்களை நன்றாகச் சமையல் செய்தல்வேண்டும். இதனால் கடினமான பொருள்களெல்லாம் மென்மையாகி வாயிற் போட்டு மெல்லக்கூடிய தன்மையை அடைகின்றன. மேலும் சமைத்த உணவு கையினால் நன்றாகப் பிசையப்பெற்று வாயிற் போடப்படுகிறது. வேகவைப்பதனாலும் பிசைவதனாலும் வன்மைத்தன்மை நீங்கப் பெறாத பொருள்களைப் பற்கள் துண்டு துண்டாக்கி அரைக்கின்றன. பற்கள் அரைத்ததை உமிழ் நீர் கலந்து சேர்க்க நாக்கு உருட்டுகிறது. உணவிலிருக்கும் கஞ்சிப் ப்பசை தண்ணீரில் கரையும் தன்மையதன்று; சர்க்கரை கரையும். கஞ்சிப்பசையைச் சர்க்கரையாக மாற்றுவது உமிழ் நீரே. உணவோடு உமிழ்நீர் சம்மந்தப்பட்டால் அது சர்க்கரையாக மாறி இனிப்புண்டாகிறது. உமிழ்நீர் என்பது நாக்கின்கீழ் ஊறும் எச்சிலே. இது உணவைச் சீரணமாக்குவதற்கு இன்றி யமையாது வேண்டப்பெறுவதால் இதனை நாம் அடிக்கடி உமிழ்ந்து விணாக்குதல் கூடாது.

நாம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது இடையில் தண்ணீர் குடிப்பது தவறு. ஏனெனில் தண்ணீர் உணவைச் சீரணமாக்கும் எச்சில் முதலிய பொருள்களோடு கலந்து அவைகளின் வீரத்தைக் குறைத்துவிடுகிறது. நாம் உணவை விரைவாக உண்ணக்கூடாது. ஏனெனில் மெதுவாக உண்டாலே உணவுப்பொருள் நன்ருக அரைக்கப்பெறும். மேலும், சில வேளைகளில் உணவு நேரே போகாமல் காற்றுக்குழாயில் தவறி விழுந்துவிடும். அப்போது புரையேறி நமக்குத் துன்பம் விளையும். புரையேறுதலாவது வேறுபுரையில் உணவு ஏறுதல். புரை—துளை.

உணவு இவ்வாறு அரைக்கப்பட்டு எச்சிலோடு சேர்த்து உருட்டப்பெற்று உள்ளே தள்ளப்பெறுகிறது. அப்போது அது மூக்குப்புழையுட் புகாமல் உள் நாக்குத் தடுக்கிறது. பின் அது தொண்டையில் நுழைகிறது. அங்கே அது மூச்சுக்குழாயில் விழாமல் ஒரு சிறுநாக்கு அதைத் தடுத்து உணவுக்குழா (Gullet) யில் தள்ளுகிறது. அக்குழாயில் உணவு தன்கனத்தால் தானகவே இறங்குவதன்று. அங்குள்ள தசைகள் விரிந்தும் சுருங்கியும் உணவைக் கீழேகலக்கி அமுக்கித் தள்ளுகின்றன. இவ்விடத்திலும் ஒருவகைச் சாறு உணவுடன் சேர்கிறது. அது உணவுக் குழாயிலேயே தோன்றுவது.

பின், கீழ்நோக்கியே திறக்கும் தன்மையதான கதவைத் திறந்துகொண்டு உணவு வயிற்றில் விழுகிறது. வயிறுதான், நாம் உண்ணும் உணவின் அளவின் குறைவு நிறைவுகளை நமக்கு அறிவிக்கும் அளவு கருவி. வேண்டும்அளவு உணவு தன்னுள் வந்தவுடனே வயிறு அச்செய்தியை ஒருவகை உணர்ச்சி மூலமாக நமக்கு அறிவிக்கிறது இவ் அளவுக்கு உணவு அதிகமானுலும் உடம்பில் நோய் தோன்றுகிறது; குறைந்தாலும் பசிநோய் தோன்றி வருத்துகிறது. ஒரு நேரம் உணவு இல்லாமல் இருப்போமென்ருல் வயிற்றில் தீ எரிவதைப்போலும் துன்பம் உண்டாகிறது. "இரண்டு நேரங்களுக்குச் சேர்த்து உண்டு கொள்வோம்; இப்போது கிடைத்தது நல்ல உணவாகவும் இருக்கிறது" என்று எண்ணினல் அதற்கும் வயிறு இடந்தருவதில்லை.

ஆதலினாலே பெரியாரும்,

"ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்
இருநாளைக்(கு) ஏல்என்றால் ஏலாய்—ஒருநாளும்
என்நோ(வு) அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.''

என நல்வழியில் திருவாய் மலர்ந்தருளினர்.

வயிறு ஓர் பையைப்போல் இருக்கிறது. இதனால் இது உணவுப்பை அல்லது இரைப்பை என்றும் வழங்கப்பெறுகிறது. இப்பையிலுள்ள தசைகள் உணவை நன்றாகக் கடைந்து நீராக்குகின்றன. அவ்வாறு அவை கடைவதற்கு உதவியாக "தீ'' (Gastric Juice) என்ற பெயரையுடைய ஒருவகைநீர் உணவோடு கலக்கிறது. இத்தீ, பருப்பு, கடலை முதலிய புலாலைவளர்க்கும் உணவுப்பொருள்களைக் கரைத்து நீரின் நிலையை அடையச் செய்கிறது. இங்கே உணவு தீயுடன் கலந்து கடையப்பட்டு சாம்பலும் மஞ்சளும் கலந்த நிறமாக நீர்நிலையை அடைகிறது. உணவு வயிற்றில் குறைந்தது பத்து நாழிகை தங்கிச் சீர் அண்ணுகின்றது.

வயிற்றில் சீரண்ணிய உணவு அதிலிருந்து சிறுகுடலிற் கீழ் நோக்கித்திறக்கும் கதவைத்தள்ளிக்கொண்டு நுழைகிறது. அது சிறுகுடலில் நுழையும் இடத்தில் அதனோடு பித்தநீர் வந்துகலந்து அதுவரை சீரடையாத கொழுப்பையும் எண்ணெய்த்தன்மையுள்ள பொருள்களையும் செந்நீரில் கலக்கும் தன்மையை அடையச்செய்கிறது. பித்தநீர் கசப்புச்சுவையை உடையது. இது வயிற்றின் வலது புறத்திலிருக்கும் பித்தஊற்றில் (Liver) ஊறுகிறது. இது அவ்வூற்றில் ஊறி அதிலுள்ள ஒரு பையில் தங்கி அதிலிருந்து ஒரு குழாய் வழியாகச் சிறுகுடலின் அடியில்வந்து சேர்கிறது. பித்தநீர் தங்கும்பை பித்தப்பை எனப்படும்.

சிறுகுடல் இருபத்திரண்டடி நீளமுள்ளது. இது ஒன்றின் மேல் ஒன்றாக மடிக்கப்பட்டு மிகக் குறுகிய இடத்தில் அமைந்துள்ளது. இரைப்பையிலிருந்து வெளியே தள்ளப்பெற்றுப்

பித்தநீரினுலும் கரைக்கப்பெற்று இதனுள் வரும் உணவில் உமிழ் நீராலும், வயிற்றுத் தீயாலும், பித்தநீராலும் கரைக்கப்பெருத கஞ்சிப்பசை யுணவும் புலாலுணவும் வெப்ப உணவும் கொஞ்சம் இருக்கின்றன. அவைகளேயும் கரைப்பதற்கு ஓர்வகைநீர் வயிற்றின் கீழுள்ள தட்டை வடிவான ஓர்சிறு உறுப்பிலிருந்து ஊறிச் சிறு குடலுக்கு வருகிறது. இதற்கு அம்மூன்று திறப்பட்ட பொருள் களேயும் கரைக்கும் ஆற்றல் அமைந்துள்ளது. இதனுல் உணவு முற்றிலும் செந்நீரோடு சேரும் சீரண நிலேயை அடைகிறது. சிறுகுடல் நெடுகக் கைவிரல்களேப் போன்ற சிறு உறுப்புக்கள் எண்ணிறந்தன இருக்கின்றன. இவைகள் கட்புலனுக்குத் தெரியாவாறு அவ்வளவு நுண்ணிய உருவின. சீரண்ணிய உணவை இந்நுண்ணிய உறுப்புக்கள் உறிஞ்சி உட்கொள்கின்றன. இருபத்திரண்டடி நீளமும் போவதன்முன்னர் சீரண உணவு முற்றிலும் இவைகளால் உட்கொள்ளப்பெறுகிறது. சீரணம் ஆகாத உணவின்சக்கை அதனேடு கலந்த நீருடன் பெருங் குடலில் புகுந்து போகிறது. பெருங்குடல் நான்கடிநீளம் இருக் கிறது. இந்தச் சக்கை நான்கடி நீளமும் சென்று உடலில் உட் காரும் இடத்திலுள்ள மலத்துளேவழியாக மலம் என்ற பெய ருடன் வெளியில் தள்ளப்பெறுகிறது.

உடம்பில் ஒவ்வொரு உறுப்பிலும் ஒருவிதமான புளிப்புத் தன்மைப் பொருள் இருக்கிறது. இப்பொருள் மக்களுடம்பிற் போலவே மாக்களுடம்பிலும், ஏனைய உயிர்களுடைய உடம்பு களிலும், மரம், செடி, கொடிகளுடைய உடம்புகளிலும் அமைந் திருக்கிறது. இப்பொருளின் உதவியினுலேயே மரம், செடி, கொடிகள் தமது உணவு சீரணமாக்கப் பெறுகின்றன. நாம் பட்டினியிருந்தால் இது நமது உடலில் உள்ள மிகப்பயனற்ற பொருள்களேத் தின்று சீரணமாக்கி உயிர்வாழ்க்கைக்கு இன்றி யமையா உறுப்புக்களுக்கு உதவி அவைகளேப் பேணுகிறது. அதனுலேயே பட்டினிக்காரர் உடலில் மெலிவு தோன்றுகிறது.

உ

சில தனிச்செய்யுட்கள்.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

அறிஞர் கூடிப் பேசும் பேச்சுக்களினிடையே சில தனிச் செய்யுட்கள் கேட்கப்பட்டு மிகுசுவையூட்டுவதை அங்கங்கு அறிந்து மகிழ்கின்றோம். அத்தனிச் செய்புட்களில் இதுவரை வெளிவராதவற்றுள் யானறிந்த சிலவற்றைத் தமிழகம் ஏற்கு மென எண்ணி நம் தமிழ்ப்பொழிலில் வெளியிடலானேன்.

மதுரைத் தமிழ்ச்சங்கங்கண்ட பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் இராமநாதபு'ம் அரசர் பாற்கரசேதுபதியவர்களைப் பாடியது.

தோழி தலைவியின் ஆற்றாத்தன்மை யாற்றக் கூறல்.

ஈச னங்கணை ஞம தன்கணையெய்தி டான்; நினை யெய்தினோர்க்
கிரவொ ழிந்திடும்; மதியு நின்குடையென்ன வின்னொளி துன்னுமால்;
வீசு தென்றலு முன்வ ரைப்படும்; வேலை யங்கடல் மேலைநாள்
மேவு முன்குல வீர னம்பினில் வேதை யுற்றது தாதெனா
ஆசை நெஞ்சைவி டுக்கின் மீளவு மணுகு றாது; சு கத்தினோ
டனம டைந்திலள்; உனைவ சஞ்செய ஆவதொன்றும றிந்திலள்
வாச மென்குழ லாகநொந்துவ ருந்திடாதுபு ரந்தருள்
வளநி ரம்பிய முகவை யம்பதி மருவு பாற்கர நிருபனே.

இதன் பொருள் :—இராமநாதபுரத்தில் வீற்றிருக்கும் பாற்கரசேதுபதியரசே! எங்கள் தலைவி யுன்மேற்கொண்ட காதல் தன்னளவில் நில்லாது மிகுதலாற் பெரிதும் வருந்துகின்றனள். அவ்வாறு மிகும்படி மன்மதன் கணையெய்கின்றான்; அதனோடு இராக்காலமும், நிலாவும், தென்றற்காற்றும், கடலும் அத்துன்பினைப் பெரிதாக்குகின்றன. இவைகள் அவளைத் துன்புறுத்து

வதுபோல உன்னையும் துன்புறுத்தத் தொடங்கின் அவள்போல நீயும் காதல்நோயுறுவை; எங்கள் தலைவியை அடைவை. இவை நின்னையொன்றும் துன்புறுத்தும் வலியில்லன. என்னெனில், நீயோ பரிதிகுலத் தோன்றல்; பரிதியோ இறைவனது வலக் கண்; முன்னொருகால் இறைவனொருவிழியாற் சூடுண்ட மன் மதன், மற்றொரு விழியாகிய நினக்குப் பயந்து நின்னையொன் றுஞ் செய்யகின்றிலன்.

இரவோ எனில்—நின்னையடைந்தவர்க்கும் (இரவு=ஒன்றை யிரத்தல்) ஒழியும்; ஆயின் நினக்கு இரவு இல்லையென்பது கூறல் வேண்டா.

நிலாவோ—நினது குடையா யமைந்து நினக்குத் தண் ணென்ற ஒளிவீசுவதல்லது வெச்சென்ற ஒளிவீசாது.

தென்றற்காற்றோ—உனது (பாண்டி) நாட்டிலுள்ள (பொதி யில்) மலையில் தோன்றும். ஆதலின் உன் (வரைப்படும்) ஆட்சிக் குட்பட்டதாயிற்று; உன்னையொன்றும் துன்புறுத்துகிலது.

கடலோஎனில்—உன் குடியில் வந்த ஆண்மகனாகிய இராம னது அம்பினாற் சூடுண்டதேயாதலின் அதுவும் நின்னை யொன் றும் செய்யகின்றிலது.

இவை கிடக்கத் தண்ணளியினனாகிய நீ யிவள் துயர்நிலை யறியின் அது தீர்ப்பாய்; அதை நினக்குரைப்பா ரில்லாமையே குறை; ஆதலின் நினக்குத் தூதுவிடும் பொருள்களில் அவள் பால் என்னுளது? நெஞ்சைத் தூதுவிடுவா ளெனில், அது முன்பேதொட்டு நின்னையடையும் மயல்கொண்டதாதலின் ஒரு கால் நின்பால் வந்து நின்வயப்பட்டு இங்கேயே தங்கிவிடுமோ வென்னும் ஐயம் பெரிதாகலின் அதுவுஞ்செய்யகின்றிலள்.

இனி, தூதிற்குரியது சுகம் (கிளி); அதை விடுக்கலாம்; அன்னம் (பறவை); அதைவிடுக்கலாம்—எனின், அவள் அன்று தொட்டே சுகமும் அன்னமும் (உணவு) இல்லாதவளாதலின் இம்முயற்சியும் பயனற்றதாம்.

ஆகலின் நினை வசஞ்செய ஆவது ஒன்றும் அறிந்திலள்; அவளை வருந்தச்செய்யாது இனியேனும் வரைந்துகொண்டு வாழ்வாயாக என்பதாம்.

இது மதுரைத் தமிழ்ச்சங்கத்திருந்து காலஞ்சென்ற சுந்தரேச ஐயரென்பார்பாற் றேரிந்துகோண்டது.

(2) தென்றல்வருணனை.

(பாடினர் பெயர் முதலியன தெரியவில்லை.)

மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதிலே

திங்கள் நிறைந்துவருஞ் சேயிழை யார்நடைபோல்
தென்றல சைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்!

கங்கைபின் நன்கணவா! காவிரி யின்கொழுநா!
கன்னிதன் நாயகமே! சென்னிநன் னுடையாய்!

எங்களி ளங்கொடிதான் உங்களி ளம்பிறையால்
எத்தனை கோடியிரா இப்படி வாடுவதே!

இதில், தென்றற்காற்று மெல்லென அசைந்து வருவதற்குக் கூறும் உவமை பாராட்டற்பாலது. ஆண்மக்கள் நடப்பதிலும், பெண்டிர்நடை மெல்லநடப்பது. அப்பெண்டிரும் கைம்மைகளாயிராமற் கட்டுக்கழுத்திகளா யிருந்தால், பூண்ட அணி, ஆடைகளைச் சுமந்து செல்ல நேரும். அவருள்ளும் அரசர் வீட்டுப் பெண்களாயிருந்தால், அவ்வணிகளையும், ஆடைகளையும் அளவுக்குமீறியே அணிந்திருப்பர். அவருள்ளும், கருவுற்றிருப்பவர்கள்; அவருள்ளும் ஒன்றுக்குமேற்பட்ட பிள்ளைகளை வயிறு வாய்த்தவராயிருந்து, திங்களும் நிரம்பி அவர்கள் ஒருநல்வினை (சுபகாரியம்) யில் நடந்துவரநேரின் எவ்வாறு மெல்லென நடந்து வருவார்களோ அவ்வாறு அசைந்துவரும் தென்றற்காற்றினையுடைய தமிழ்நாட்டதிபனேயென்று தென்றலுக்கு உவமை கூறியிருப்பது காண்க. பாடலின் சந்த ஒற்றுமையும் நோக்கியுணர்க.

இது சிதம்பரம் மீனாட்சி கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் திரு. சர்க்கரைப் புலவரவர்கள்பாற் றெரிந்துகொண்டது.

(3) வெறிவிலக்குதல்

(பாடினவர் பெயர் தெரியவில்லை.)

"மடந்தைக்கும் பேய் பிடிக்குமா" என்னுமீற்றடி கொடுக்க ஏனையடிகளையும் நிரப்பிப்பாடியது.

வெண்பா

இரும்புழுத புண்ணுக் கிடுமருந்தென் செய்யும்
கரும்புதரு மென்மொழியீர் காணின்—விரும்பிக்
குடந்தைக்கும் பேசுரான்மேற் கொண்டமைய லல்லால்
மடந்தைக்கும் பேய்பிடிக்கு மா.

வெறி விலக்குதலாவது— தலைவிக்குற்றநோய் பேய்கோட் பட்டுவந்ததெனப் பிழைபடவுணர்ந்து, அது தீர்ப்பான் ஆடு பலிகொடுக்க முன்வந்த சுற்றத்தவர்க்கு 'இது கடவுள்மாட்டு நயந்த நயப்பால்வந்தநோய்; உரியவழியால் தீர்க்கமுயலுமின்; ஆட்டை வெட்டுதலோம்புமின்' எனத் தோழி விலக்குவது.

இப்பாடலில் இரும்பு—எழுத்தாணி (இருமடியாகுபெயர்)
அதனால் உழுதல்—ஏட்டில் எழுதல்.
புண்—எழுத்து.
அதற்கு இடும்மருந்து—மை. (எழுதின ஏட்டிற்கு மைதடவிப் படிப்பது வழக்கம்) மை—ஆட்டுக்கிடாய்.

ஈற்றடிக்கேற்ப மூன்றுமடி யெடுத்திருப்பது கவிஞர் அறிந்து பாராட்டத்தகுவது.

இது ஒரு முகமதியப்புலவராற் றெரிந்துகொண்டது.

இளங்கிளை.

பண்டிதர், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், ஈபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

அரசாங்கத்தார் வெளியிட்டுவரும் தமிழ் அகராதியில் (Tamil Lexicon) இளங்கிளை என்பதற்குத் தங்கை என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இதற்குத் தங்கை என்பதே பொருளன்று. தம்பி, தங்கை, மகன், மகள், மைத்துனன், தோழன், மாணாக்கன் முதலிய இளஞ்சுற்றத்தினர் பலரையும் இது குறிப்பதாகும்.

"ஏவாது மாற்று மிளங்கிளையும்" (திரிகடுகம்)

என்பதில் மக்கள் என்னும் பொருளிலும்,

"சீல மறிவா னிளங்கிளை (திரிகடுகம்)

என்பதில் மாணாக்கன் என்னும் பொருளிலும்,

"மாலவற் கிளங்கிளை" (சிலப்பதிகாரம்)

என்பதில் தங்கை யென்னும் பொருளிலும்,

"எழுமையும் பெறுக வின்ன இளங்கிளைச் சுற்றமென்றாள்" (சீவகசிந்தாமணி)

என்பதில் மைத்துனன் என்ற பொருளிலும் இத்தொடர் வந்துள்ளமை காண்க. 'ஏவாது மாற்று மிளங்கிளையும்' என்பதில் இது மக்கள் என்னும் பொருளேயன்றித் தம்பி யென்னும் பொருளும் பயப்பதாகும். இனி,

"இளங்கிளை யாரூரன்" (தேவாரம்)

என நம்பியாரூரர் தம்மைக் கூறிக் கொள்ளுதலின், இது தோழன், தொண்டன் என்னும் பொருள்களும் பயப்பதாகும். பலராலும் பயிலப்பெற்றுவரும் தமிழ் இலக்கியங்களில் இங்ஙனம் விரிந்த பொருளுடையதாகப் பயின்றுவரும் தொடரைக் குறுகிய பொருளுள்ளதாகக்கொண்டு, பெரும் பொருட்செலவானும் பல பேரறிவாளர்களின் உழைப்பானும் வெளிவரும் அரசாங்க வெளியீட்டகராதியில் 'தங்கை' என்று பொருள் குறித்திருப்பது மிக்க வியப்பைத் தருகின்றது. குறுகிய கால வெல்லையில் விரைந்து முடிக்குங் கருத்தால் இத்தகைய தவறுகள் நேர்வனபோலும்!

திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் ச, பக்கம் 480.)

சரு. பரமென்றும் நாலாய்ப் பணைத்தெழுந்த வேத
சிரமென்றுஞ் செஞ்சுவை யாழேழ்—சுரமென்றும்
தேவரசக் கானத்திற் செப்பும் பெருந்தெய்வம்
மாவரசக் கானத்தின் வாழ்வு.

பரம் என்றும்—பரம்பொருள் என்றும், நாலாய்ப் பணைத்தெழுந்த வேத சிரம் என்றும்—இருக்கு முதலிய நான்கு கிளை விட்டெழுந்த வேதத்தினது சிரமாகிய உபநிடத்துக்கள் என்றும், செம் சுவையாழ் ஏழ் சுரம் என்றும்—செவ்வியசுவையை யுடைய வாய் யாழினிடத்துண்டாகிற ஏழுசுரங்களென்றும், தேவர்—நிலத்தேவர்களது, ரசக்கானத்தில்—ரசவத்தாகிய சாமகானத்திலே, செப்பும் பெருந்தெய்வம்—தோத்தரித்துச் சொல்லுகின்ற தனிப்பெருங்கடவுள், அரசக்கானத்தின் வாழ்வு—அரசவனம் என்னப்படுகிற திருச்சுழியலின் வாழ்வாயிருப்பவராகிய திருமேனி நாதனேயாம் என்றவாறு. ரசம் என்பது—'ரவிகுலதிலகன்' என்றாற்போல வந்தது. மனைவி மக்கள் செல்வம் முதலிய எல்லா வாழ்வும் தானாகவே இருப்பவன் என்பார், பொதுப்பட 'வாழ்வு' என்றார்.

சசு. வாழுந் திறத்தினர்யார்? மாச்சுழிய லையாரின்
தாழுஞ் சடைநீர் தனுவளர—ஆழும்
பனிச்சோம சீதளனே பாவகரி மூழ்கும்
தனிச்சோம சீதளனே சாற்று.

தாழுஞ் சடைநீர்—தாழ்ந்து வீழ்ந்துள்ள சடையினிடத்துள்ளதான கங்கா நதிப்புனலிலே, தனுவளர—குறைந்துள்ள

தனது உடம்பு வளரவேண்டும் என்னும் விருப்பினால், ஆழும் பனிச்சோம சீதளனே—எப்பொழுதும் ஆழ்ந்து மூழ்கி எழும் சீதள கிரணத்தையுடைய சந்திரனே, பாவகரி மூழ்கும்—பாவகரி என்னும் நதியிலே ஒருமுறை மூழ்கப்பெற்றவனான, தனி சோம சீதளனே—ஒப்பற்ற சோம சீதளனெனும் அரசனே, வாழுந் திறத்தினர் யார்—(இவர்களில்) வாழுந் திறத்தைப் பெற்றவர் யாவர்?

கொடியரோகமுடையவனான சோமசீதளனென்னும் மாளவ தேசத்தரசன், ஒருமுறை பாவகரி நதியில் மூழ்கி எழுந்தவளவிலே, அந்நோய் தீர்ந்து நல்லுடம்புபெற்று மகிழ்ந்தான்; உமது சடையில் உள்ளதாகிய கங்கை என்னும் புண்ணிய நதியில் எப்பொழுதும் மூழ்கிக்கொண்டே இருப்பவனாகிய சந்திரன் தன் நோய் தீரமாட்டாது வருந்துகிறான்; ஆகலான் இவர்களில் நல்வாழ்வு வாழுந் திறத்தையுடையவர் யாவர் என்று வினவு முகத்தால் கங்கையினும் பாவகரியினது தூய்மை விளக்கியவாறும்.

பனி—வெண்மை; வெண்குட்டரோகத்தையுடையான் என்பதைக்காட்ட இவ்வாறு கூறினார். பனி—துன்பமுமாம். 'தாழுஞ்சடைநீர்' என்ற இடத்துத் தாழ்தல் நீருக்குங் கொள்ளப்பட்டு, பாவகரியிற் றாழ்ந்ததான கங்கை என்ற பொருளையுங் கொண்டு நிற்றல் காண்க. அன்றி, நீர் என்றதனால் அதன் பெருமை கேட்டறியவேண்டும் என்பதும், பாவகரி என்றதனால், இதன் பெருமை சொல்லாமலே வெளிப்படும் என்பதும் கொள்ளப்படுமாறு உணர்க. இச்செய்யுளின் பின்னிரண்டடியில் திரிபு என்னும் சொல்லணி காண்க.

பிரிவாற்றாத தலைவி பிறை முதலியவற்றான் வருந்தி இரங்கல்.

கஎ. சாற்றிற் சடைமேற் றனிமதியும் வேண்டுமோ
ஏற்றின் மணியொன் றிசையாதோ—போற்றி
ஒருமா வினியளித்தார்க் கோயாதே வந்திங்
கிருமா வினியளிப்பார்க் கின்று

ஒரு மாலினி போற்றி அளித்தார்க்கு—முன்னம் வேதாளத்தாற் பிடிக்கப்பட்டிருந்த மாலினி என்னும் அரச குமாரத்தியை அப்பீடையினின்றும் விலக்கிக் காத்தவருக்கு, இருமால் இனி அளிப்பார்க்கு—பெரிய மையலேயும் இனியும் அளித்துச் செல்ல வல்லராகிய திருமேனிப் பிரானுக்கு.

துணை வேண்டாதே என்போன்ற அபலைகளைக் கொல்ல வல்ல மதி என்பாள் 'தனிமதி' என்றாள்; அன்றி, கூடியிருக்குங் காலத்து ஆண்மை காட்டமாட்டாது தனித்திருக்கும் காலத்து ஆண்மை செலுத்தும் மதி என்பாள், இவ்வாறு கூறினாளுமாம்.

முன்னம் ஒரு மாலினி அளித்தார்; அதனோடு நிற்காது, இப்போது இருமாலினி யளிக்க வந்தார் என்ற கவித்திறம் பாராட்டற்பாலது. இச் செய்யுளை,

"ஏற்றின் மணியே யமையாதோ வீர்ஞ்சடைமேல்
வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ—ஆற்றருவி
கன்மேற்பட் டார்க்குங் கயிலாயத் தெம்பெருமான்
என்மேற் படைவிடுப்பார்க் கீங்கு" என்ற நக்கீரதேவரது

பாடலோடு ஒப்பு நோக்குக.

கூஅ. இன்று புவனேசன் என்னை யிவுன் றுதித்தான்
என்று மகிழ்ந்தெனக்கும் பாசுபதம்—ஒன்ற
அருள்படுத்தா னுகையினுற் கௌரவன்யா னைவர்
இருள்படுத்தேன் தன்மநிலத் தேய்ந்து.

பா சுபதம் ஒன்ற—(அடியேன் செய்யும்) பாட்டானது நற்பதங்களோடு சேர்ந்து விளங்குமாறு, அருள் படுத்தான்—கிருபை செய்தான். படுத்தல் என்பது இப்பொருள்பட வருதலை 'இடர்ப்படுத்திரீஇய' என்ற இடத்திலும் காண்க. கௌரவன் யான்—கௌரவத்தைப் பெற்ற அடியேன், தன்ம நிலத்து எய்ந்து—தருமம் தங்குமிடமான திருச்சுழியலிலே பொருந்தி, ஐவர் இருள் படுத்தேன்—பஞ்சேந்திரியங்களாகிய பகை யிருளை ஒழித்திட்டேன். இருள்—பகையிருள். "இருளறுக்கும், எண்ணிய தேயத்துச் சென்று" என்றார் நாயனாரும்.

இனி, இச் செய்யுளில், பூமிநாதன் கௌரவனாகிய எனக்கும் அருச்சுனனுக்குக் கொடுத்ததுபோல, "பாசுபதம் என்னும் அம்பைக் கொடுத்தனன், ஆகையால் தரும பூமியாகிய குருக்ஷேத்திரத்தில் போய் நின்று, பஞ்ச பாண்டவர்களாகிய பகையிருளை அறுத்திட்டேன், என்ற வேறொரு பொருளும் காணப்படுவது நோக்குக.

சுசு. எய்ந்தபெருங் கால்கடுக்க எங்குந் திரிந்தெடுத்துத்
தோய்ந்தபெருஞ் செல்வச் சுழிகேசா!—ஆய்ந்தபெருங்
கள்ள மலரொளியார் காறாவு வாரறியார்
உள்ள மலரொளியா நின்று.

மனமாகிய பூவைத் தூவி வணங்காது, கள்ளமலரைத் தூவி வழிபடும் அறிவில்லார் வழிபாடு பயனற்றது எனக்கூறுகிறார் இப்பாசுரத்தில். கால் கடுக்க—கால்களிரண்டும் கடுக்குமாறு; காற்றைப்போல எனினுமாம். இனி, பெருங்கால் என்பதற்குப் பெரியகாலையுடைய அறுபதம்எனினும் இழுக்காகாது. கால்கடுக்க என்பதில் காற்றைப்போல எங்கும் நாடி, வண்டைப்போல எம் மலரையும் ஆய்ந்து என இருபொருள் படுதல் வியப்பு. ஒன்றை விட்டு ஒன்று நீங்காது இணைந்தேசெல்லும் காற்றையும் வண்டையும் போல எனப்பொருள் கூறலும் ஒன்று. 'வண்டொடு காலையும் வாவுமாற்றினான்' என்பது கவிச்சக்கரவர்த்தி வாக்கு. கள்ளமலர்—தேனையுடைய பூ. உள்ளமலர்—தம்மிடம் உள்ளதாகிய பூ என்றுமாம். இருக்கும் மலரைக்கொண்டு வழிபட வகைதேடாது, இல்லாத மலரைக்கொய்து வருந்துகின்றமைபற்றி 'அறியார்' என்றார் என்க.

இனி, இப்பாசுரம், 'காற்றைப்போல உருத்தெரியாது மெதுவாக நுழைந்து அலைத்துப் பறித்துவந்த கள்ளமலரை (திருட்டுப்பூக்களை) ஒளித்துவையாது அவற்றைப் பொருட்குறைபாடில்லாச் சுழிகேசனென தேவரீரது சேவடிக்கீழ் சேர்க்கிறார்; ஒளிக்கவேண்டாததும் தம்மிடத்து உள்ளதுமாகிய மல

றொன்றை ஒளிக்கிறார்; இத்தகைய அறிவினரது வழிபாடு உமக்குப் பொருந்துமோ' என மற்றொரு பொருளும் கொண்டிருத்தல் நனி பாராட்டற்பாலதாம்.

எ0 நின்றான் கிடந்தான் நெருநல் அவனின்று
சென்றான் எனப்படுமிச் செல்வத்தை—ஒன்று
நினைவிருக்க வையனையும் நெஞ்சேநீ நீழற்
புனைவிருக்க வையனையே போற்று.

நெருநல்—நேற்று. சென்றான் — செத்துவிட்டான். இச் செல்வத்தை—இவ்விதமான நிலையற்ற உலக வாழ்க்கையை. ஒன்று—ஒரு பொருளாக, நினைவு இருக்க வையல்—மனத்திலே தங்கும்படி வையாதே. விருக்கம்—விருக்ஷம் என்ற வடசொற் றிரிபு. போற்று—வைத்த மாநிதியாகக்கருதித் துதி செய்வாயாக. 'செல்வமொன் றுண்டாக வைக்கற் பாற்றன்று' என்ற நாலடியாரிற்போல, 'செல்வத்தை—ஒன்று, நினைவிருக்க வையல்' என்றார்.

பொய்வாழ்க்கையைச் செல்வம் என்றது எதிர்மறை இலக்கணை; 'நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும், பெருமை யுடைத்திவ் வுலகு' என்ற குறளில், 'பெருமை' என்பதுபோல.

எக. போற்றார் புரமெரித்தாய் புன்சிரிப்பா னென்றுன்னைத்
தோற்றா ரசகாய சூரனென்பார்—மாற்றார்
தனுநாதா! முன்னஞ் சகாயந்தா னின்றேல்
தனுநாதா! தாங்குவையோ சாற்று.

இப்பாட்டை 'நிந்தாஸ்துதி' என்பர் வட நூலார்.

தோற்றார்—ஆற்றமாட்டாதவர்கள். பராக்கிரமத்தில் ஈடுபட்டவர்களுமாம். ஒன்றும் தோன்றாத பிராமகர்கள் என்றல் நன்கு பொருந்தும். அசகாய சூரன்—பிறருடைய துணையை எதிர் பாராத வலியன். மாற்று ஆர் தனு—நல்ல மாற்றோடு பொருந்திய பொன்மயமான மேருவாகிய வில்லை. சகாயந்தான் இன்றேல்—சகாயமானது இல்லாமலிருப்பின். சகாயம் என்றது அம்மை

யாகிய சகாயவல்லியை. விற்பிடிப்பது இடதுகையே யாகலானும், அவ்விடது கைதான் அம்மையினது திருக்கையாக இருப்பதனு னும் சகாயம் இல்லாதிருப்பின் நீர் முன்னம் எங்ஙனம் மேரு மலை யைச் சிலையாகக் கையாலே எடுத்துப் பிடித்திருப்பீர் என வினவு கின்றனர் என்க. சகாயம்—துணை, சகாயவல்லி. இப்பாட்டினை அடியொற்றிக் கவிஞர் பெருமானான, ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள், தமது திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலையில்,

'நெடுவலி கொடுமா மேருவிற் பிடித்தாய் நீயஃ துணர்குவன் யானும்
அடுதிறற் சூலி பிடித்தனன் என்பா ரவனியுட் சிலர்கருத் தென்னோ
இடுகிடை நீயும் அவனும்வே றல்லீர் என்பதை யுணர்ந்தனர் கொல்லோ
கடுவிழி மடவார் பயில்திரு வானைக் காவகி லாண்டநா யகியே".

என்பர்.

எ௨. சாற்றும் வரைமகளைச் சார்ந்தும் வரைமலர்க்கை
யேற்றும் வரையிருந்து வரையாய்த்—தோற்றுந்
திருமேனிப் பெம்மான் திருவுளத்திற் காமென்
கருமேனிக் காழ்மனமாங் கல்.

சாற்றும்—வேதங்களினாலே புகழ்ந்து பேசப்படுகின்ற, ஏர்வரையாய்—உன்னதமான மலை வடிவாகவும், கருமேனிக் காழ் மனமாங் கல்—இருள் நிறங்கொண்ட மனமாகிய கல். ஆம்— இனிது வசிப்பதற்கு ஏற்ற இடமாகக் கொள்ளத்தக்கதாம்.

எவ்வகையினும் தனக்கு மலையினது தொடர்பு இருக்க வேண்டுமென்பதாக விரும்புகிற மலைவடிவமான திருமேனிப் பெருமானது திருவுளத்திற்கு அடியனேனது மனமாகிய கல் வீற்றிருப்பதற்கு மிகவும் உவப்பானது என்பதாம். அம்மை— பச்சை நிறம்; மேரு—மஞ்சள் நிறம்; கைலை—வெண்ணிறம்; தழற்பிழம்பாகிய மலை—செந்நிறம்; ஆகலின், திருமேனிப்

பிரானுக்கு நிற வேறுபாடும் திருவுள்ளமாம் என்பது கருதி, தமது மனக்கல்லைக் 'கருமேனிக் காழ் மனமாங்கல்' என்றார் என்க. இச் செய்யுளின் பொருள்

'வரையக மமர்ந்தும் வரைகரங் கொண்டும் வரையுத வொரு
மகட் புணர்ந்தும்
புரையிலோர் தலத்து வரையுரு வெடுத்தும் பொலிவைநின்
மனம்வரை யன்றே
விரைமலி யகன்மா ளிகைதொறு மேற்றும் விளக்கொளி
மிகையென விளங்கிக்
கரையகன் மணிப்பூண் மடந்தையர் பயிலுங் கலைசைவாழ்
சிதம்பரேச் சுரனே'

எனவரும் கலைசைச் சிதம்பரேசுவரர் மாலைச் செய்யுளிலும் ஒருவாறு குறிப்பிடப்பட்டிருப்பது உணரத்தக்கது.

எங. கற்று வறியாத கன்றில்லைத் தன்கன்றைப்
பெற்று நனியறியும் பேருலகின்—நற்றாய்
புனைய டிவாழ் நீயென்னிற் பூமீசா! என்னை
உனைய டியேன் காண்கிலன்மற் றேது.

ஆ கற்று அறியாத கன்று இல்லை—(இது நம்மையீன்றதாய் என்பதாக) அறிந்துணராத கன்று (உலகத்தில்) இல்லை; இனி, கற்று என்பதற்கு, கன்றையுடைய பசு என்னுமாம்.

பெற்றஆ—பெற்றதாய்ப்பசு. பெரிய பசு என்றும், பெற்றமாகிய பசு என்றும் பொருள் கோடலுமாம். கன்றைப்பெற்று என இயைத்துப் பொருள் கூறினும் அமையும். செவிலித்தாயை விலக்க நற்றாய் எனக்கூறினார். நல்தாய்—நல்ல தாயாய் இருப்பவன். பசுக்கள் மரத்தடியில் தங்கப்பெறுவதோரொற்றுமையுந் தோன்ற, 'புனையடிவாழ்நீ' என்றார். இப்பாசுரம்,

"தாய்தன்னை யறியாத கன்றில்லைத் தன்கன்றை
யாயு மறியும் உலகின்று யாகினைய
நீயறிதி யெப்பொருளும் அவையுன்னை நிலையறியா
மாயமிது வென்கொலோ வாராதே வரவல்லாய்",

என்ற கம்பராமாயணச் செய்யுளை அடியொற்றி வந்தது அறிக. 'பல்லாவு ளுய்த்து விடினும் குழக்கன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலை' என்ற நாலடியாரும் ஒப்புநோக்கத் தக்கது.

எச. ஓதும் பிறைபொடிநீ ரோங்கல் விடைமுதலா
ஏதும் வெளுப்பாக ஏற்றருளும்—வேதத்
துதியவனுந் தென்சுழியற் றேன்றலுக் கிவ்வெள்ளை
மதியவனை யாட்கொளலு மாண்பு.

பொடி—விபூதி. ஓங்கல்—திருக்கயிலாய மலை. முதலா ஏதும்—முதலாகப் பிறஎவற்றையும். வேதத்துதியவன்—வேத கானத்தால் துதிக்கப்படுகின்றவன். வெள்ளை மதியவனை—வெள் ளறிவுடைய அடியேனை. 'பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை, பதினெண் கணனும் ஏத்தவும் படுமே' என்று கூறியுள்ளதால் 'ஓதும்பிறை' என்றார் என்க. வெள்ளைமதி என்ற இடத்தில் வெண்மை அறியாமை மேற்று. இச்செய்யுளையே அடியொற்றி ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

"வெள்ளிய பிறைநீர் நுண்பொடி துரோணம் விடைவரை யானைமுற் பலவும்
தள்ளிய விலாநீ வெள்ளறி வுடையேன் றன்னையுங் கொள்வது வழக்காற்
புள்ளிய லோவ பாடமேன் மடவார் புலவியிற் குழனின்றுங் கழித்த
கள்ளியன் மாலைக் காம்பைய ரூடுங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே"

என்பர் கலைசைச் சிதம்பரேசுவர் மாலையில்.

எரு. மாணிலான் பித்தன் வயலூரான் றன்றலைமேல்
நாணிலான் மூன்றே நவைபொறுக்கும்—வாணிலாக்
கங்கையைக் கொண்டான் கணக்கில் பிழைபொறுக்கும்
மங்கையைப் பாகத்தே வைத்து.

கணக்கில் பிழைபொறுக்கும்—கணக்கில்லாத பிழைகளைப் பொறுத்தருள்பவளான, மங்கையை—என்றும் இளமை மாறு தவளான மங்கையாகிய சகாயவல்லியை. வாள் நிலா கங்கையை-

ஒள்ளிய நிலாவையொத்த வெள்ளிய கங்காதேவியை, இனி வாள் நில்லாக் கங்கை என்றுரைத்து, அளவில் பல பிழைபொறுக்கும் உமையம்மையினது குணமேம்பாடு கண்டு ஒளிகுன்றி வெள்கிய கங்கை என உரைப்பினும் பொருந்துமாறு காண்க. திருமேனிப் பிரான், கணக்கில்லாத பிழைகளைப் பொறுத்தருளும் உமையம்மையைத் தன் திருமேனியின் ஒரு பகுதியிலேவைத்து, மூன்று பிழைகளளவே பொறுக்கும் கங்கையை வெட்கமற்றுத் தன் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டான்; ஆதலால் மாட்சியில் லாதவனாய்ப் பித்தனென்று சொல்லத் தகுதியுடையவனாய் இருக்கிறான் என்றவாறு. இச்செய்யுளை

“ அளவறு பிழைகள் பொறுத்தரு ளின்னை யணியுருப்
பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னைச் சடைமுடி
வைத்தன னதனாற்
பிளவியன் மதியஞ் சூடிய பெருமான் பித்தனென்
றொருபெயர் பெற்றான்
களமர்மொய் கழனி சூழ்திரு வானைக் காலகி
லாண்டநா யகியே ”

எனவரும் பின்னுள்ளார் செய்யுளோடு ஒப்புக்காண்க.

எசு. வைய நெடுந்தேர் வயலூரா! நீ யுறையும்
வெய்ய பிறவி விடாய்தணிக்கும்—செய்ய
குளிர்நாகத் தார்மாமோ கூறிற் சிறந்த
தொளிர்நாகத் தார்மாமோ வோது.

பிறவி விடாயைத் தீர்க்கமாட்டாத கற்பக மாம் சிறப்புடைய தன்றென்பது இச் செய்யுளிற் போந்த பொருள். நாகம் தார் மாம்—புன்னாகமாகிய மலர்கள் நிறைந்த மாம். ஒளிர் நாகத்து ஆர் மாம்—பிரகாசிக்கின்ற தேவலோகத்திலுள்ள கற்பக மாம். பூமியைத் தேராக்க வல்லானுக்கு மாமும் ஓர் இனிய வீடென்பார், ‘வைய நெடுந்தேர் வயலூரா’ எனவும், ‘நீ உறையுங் குளிர் நாகத் தார் மாம்’ நாகம்-தேவலோகம். அது பொன்மயமாயிருத்தலின்,

'ஒளிர்' என அதற்கு அடைமொழி கொடுக்கப்பட்டது. இச் செய்யுளின் கருத்து

" இடையறு வன்பு பெருக்கிநீ பூசை யியற்றிட வினிதுள
முவந்து
சடையரு முடியோன் உறைதரப்பெற்ற தண்ணிழ லுவலந்
தருவோ
புடையரு ளமரா ருறைதரப்பெற்ற பொலந்தரு வோசிறந்
ததுகட்
கடையருக் கருணை யாய்திரு வானைக் காவகி லாண்டநா
யகியே "

என்னுஞ் செய்யுளில் ஒருவாறு கூறப்பட்டிருத்தல் காண்க.

எஎ. ஓதத் திறனற் றுணர்வொடுங்கி நாவிறங்கும்
சாதல் குறுகிற் றனுகாதா—ஆதலால்
அப்போதைக் கிப்போதே யன்பாற் றுதிக்கின்றேன்
ஒப்போதற் கில்லா வுனை.

சாதல் குறுகில்—மாணம் கிட்டும்போது. திறன் அற்று—வலியில்லாமல். நா இறங்கும்—நாக்குத் தொங்கவிட்டுப் போகும்

இப்போதே—திறனும் உணர்வும் உள்ள இந்தக் காலத்திலேயே. இப்பாட்டை,

" சாதன் முடுகிற் றனைமறந்து நாவிறங்கு
மாதுயரிற் சற்றும் வழுத்தறியேன்—ஆதலினால்
அப்பொழுதைக் கிப்பொழுதே யன்பால் வழுத்துகின்றேன்
ஒப்பனையாள் பாகா வுனை " எனவரும் பிறர் செய்புளோடு ஒப்பு நோக்குக.

" அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தே னரங்கத் தரவணைப் பள்ளியானே " என்றார் பெரியாழ்வாரும்.

எஅ. உன்னை விடமுண் டுயிர்காத்தா யென்றமரர்
என்னை புவனேசா! எத்துகின்றார்—அன்னை
சகாயனு யன்னவள்வாய்த் தண்ணமுதுண் டாயேல்
சகாயனுய் நிற்பையோ சாற்று.

என்னை—எதற்காக. அன்னை சகாயனுய்—அன்னையாகிய சகாயவல்லியை யுடையவனுய். சகாயனுய் நிற்பையோ—(தைரியமாய் விடமுண்டு) சரண் புகுந்த தேவர்க்குச் சகாயஞ் செய்ய வல்லவனுய் நிற்க மாட்டுவையோ ; சரீரத்தோடு கூடியவனுய் நிற்பையோ எனப் பிறிதொரு பொருளுங் காண்க.

பூமிப்பிரானே! அன்னையினது அதராமிர்தத்தைப் பானஞ் செய்தமையினுனல்லவோ நீர் முன்பு பயமின்றிக் கடுவுண்டுத் தேவர்க்குத் துணை செய்யவும் வல்லராகவும் ஆனீர்! அவ்வன்னையினது பவளவா யமிர்தத்தைப் பருகியிராவிடின் துணிந்து விடத்தை யுட்கொள்ளவும் உட்கொண்டுயிரோடிருந்து சரண் புகுந்த அமரர்க்குத் துணை நிற்கவும் உம்மால் ஆகுமோ? இது இங்ஙனமாகவும், இறையோனுகிய தேவரீரையும் காத்த சகாயமான தேவியினது பவளவாயின் அமுதத்தைப் பரவகில்லாது, ஆற்றலற்ற தேவரீரை, தேவர்கள் புகழ்வது ஏனே? காரணத்தைக் கூறியருளும் என வினவுகின்றனர் என்க. இப்பாட்டை

"அயனரி குலிச னமரருண் ணடுங்க வடர்ந்தெழுங் கொழுவிடம் வாங்கி
நயன மூன்றுடையா னுண்டனன் முன்ன நங்கைநின் பவளா யமிர்தப்
பயனுணர்ந் தன்றே வலனெனின் அனைய பரமனெவ் வாறுணத் துணி
கயன்மலர்த் தடங்கள் சூழ்திரு வானைக் காவகி லாண்டநா யகியே [வான்

என்ற அகிலாண்ட நாயகிமாலைச் செய்யுளோடு ஒப்புநோக்குக.

எகூ. சாற்றுங் கறைமிடறே நித்தியத்தைத் தான்காட்ட
ஏற்றுச் சுமப்பதே னென்பினைநீ—போற்றுங்
கருமேனி யப்பனே! முப்புரத்தைக் காய்ந்த
திருமேனி யப்பனே! செப்பு.

நித்தியத்தை—தேவரீரது அழிவில்லாத் தன்மையை. என்பினை—பிரம விட்டுணுக்களின் தலை எலும்புகளை. போற்றுங் கருமேனி அப்பனே—உலகங்களைக்காக்கின்ற கரியமேனியையுடைய திருமாலாகிய அம்பையுடையவனே.

அழிவில்லாத் தன்மையைக் காட்டுவது கண்டவிடமாகவும், எலும்பணிதல் மிகையேயா மாதலின் 'அணிவது' என்றது,

'சுமப்பது' என்றார். முப்புரத்தை நகையினாலேயே எரித்தொழித்த நமக்கு ஆண்டு மாலாகிய கணைமுதலியன என்ன பயன் பட்டன? வீணையன்றோ? அதுபோலவே என்பு மாலையும் பயனற்றதே என்பார் 'கருமேனி யப்பனே! முப்புரத்தைக் காய்ந்த திருமேனியப்பனே!' என்றார். இப்பாசுரக்கருத்து

'கண்டவிட நித்திபத்தைக் காட்டவும்கங் காளமுத
லண்டமிடந் தரவைத்தாய் அம்புயஞ்செய் குற்றமெவன்'
'ஒருங்கருவி வரைகிகர்சோ வொருங்கெரிக்கு நகையிருக்கப்
பெருங்கருவி பலகொண்டாய் பித்தனெனல் விளக்கினையே!'

என்று பிறர் செய்யுளிலும் வந்திருத்தல் காண்க.

அ0. செப்பார் துணைமுலையைச் சேர்ந்தும் விகாரமிலாய்
இப்பார் முதலாய வெட்டுருவாய்த்—துப்பார்
திருமேனி நாதா! திகழ்ந்திருந்தும் நிற்கிங்
குருமேனி யொன்றிலையென் னோது.

இப் பார்முதலாய—இந்தப் பூமி முதலாகிய. எட்டுருவாய்-அட்டமூர்த்தியாய். நிற்கு—உனக்கு. உருமேனி ஒன்று இலை—உருவமாவது மேனியாவது ஒன்றும் இல்லை. என்—காரணம் யாது.

இப்பாசுரத்தின் கருத்தை யொட்டியே ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் தமது திருவிடை மருதூருலாவில்

"..........................—ஐந்துதொழில்
சந்ததமுஞ் செய்துந் தனக்கோர் தொழிலில்லா
னந்த மலையரைய னன்கீன்ற—சுந்தரப்பொற்
கன்னி யொருபாற் கலந்தும் விகாரமிலான்
துன்னியெவற் றுந்தோய்ந்துந் தோய்வில்லான்—
[முன்னியமண்
ணுதியுரு வெட்டுமெத்து வாவுருவோ ராறமிருண்
மோதிய வைந்தொழிற்கு மூலமாய்ச்—சோதி
யுறுமுருவொன் பானுமுற்று மோருருவு மில்லான்"

என்று கூறியுள்ளமை கண்டுகொள்க.

தொடரும்.

சிந்தையின் சிறப்பு.

திரு. சாமி. சிதம்பரனர், அரசர்மடம் கல்லூரித்
தமிழாசிரியர்.

சிந்தையென்பது எல்லார்மாட்டும் அமைந்துள்ளதொரு சீரிய பொருளாகும். அஃது எண்ணுதற்கும் சொல்லுதற்கும் அரிய பேராற்றல் வாய்ந்தது. அச்சிந்தையின் செய்கையை முற்றவும் ஆராய்ந்தறிவதென்பது யாவராலும் இயலாததொன்று. அம்மம்ம! அதன் ஆற்றலையும் மாண்பையும் என்னென்றுறைவது! அதன் பேராற்றலை எண்ண எண்ண அறிவுடையார் எவர்க்கும் இறும்பூதுண்டாவது இயற்கையே. அதன் ஆற்றலைப் பற்றியே சிறிது கூறுகின்றோம். அதன் ஆற்றலைச் சிறிதேனும் உணர்வதனாற் பெரும்பயன் உண்டாவது ஒருதலை.

மக்களைப் பலவகையிலும் ஆட்டிவைப்பதும் சிந்தை; மக்களைப்பயனற்றவராக அழுத்திவைப்பதும் சிந்தை; மக்களைச் சிறந்தவர்களாகச் செய்வதும் சிந்தை; மக்களைக் கீழ்ப்பட்ட மாக்களாகச் செய்வதும் சிந்தையே.

உலகில் நடைபெறும் எச்செயல்களுக்கும் சிந்தையே முதற்பொருட்டாகும். சிந்தியாமல் நடைபெறும் வினை ஒன்றேனும் இல்லையென்பதுறுதி. வித்தில்லாத முளையுண்டோ? வினவற்ற விடையுண்டோ? சிந்தனையின்றேற் செயலில்லை. எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளும் சிந்தனை யொன்றினலேயே படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய மூவினைகளையும் ஆற்றுகின்றார் எனக் கூறும் கலைகளின் கூற்றும், சமயவாதிகளின் கோட்பாடும் சிந்தையின் ஆற்றலைக் காட்டுவதற்கேற்ற எடுத்துக் காட்டுக்களாகும்.

சில செயல்களை மக்களாற்செய்து முடிக்க வியலாவெனக் கருதுகின்றோம்; தெய்வத்தால் ஆகும் வினைகளென நினைக்கின்றோம். ஆனால் அத்தகைய வினைகளைச் சிந்தையாற் செய்து முடித்தல் கூடும். வருந்தி யுழைத்தால் வாராதன எவை? முயற்சி திருவினையாக்கு மன்றோ? முயற்சியென்பது உள்ளக்கிளர்ச்சி யாகும் உள்ளக்கிளர்ச்சிக்குக் காரணம் சிந்தையேயன்றோ?

கண்ணாற் காண இயலாதனவும், எழுத்தால்எழுதிக் காட்ட ஒண்ணாதனவும் ஆகிய எத்துணையோ செயல்களைச் சிந்தையாற் காண்கின்றோம்; சிந்தையாற் செய்து முடிக்கின்றோம். எடுத்துக் காட்டாக இசைக்கலையை நோக்குங்கள்; அதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் சிந்தையின் ஆற்றல் விளங்கும். இசை யென்னும் ஒலியை எழுதிக்காட்டி அறிவிக்க இயலுமா? கையில் திரட்டி எடுத்துக்கொடுத்து வாயிலூட்டக் கூடுமா? இவ்வகையாற் காட்ட இயலாதன்றோ? அவ்வாறிருந்தும் அக்கலை மேலும் மேலும் சிறந் தோங்குவதற்குக் காரணமா யிருப்பது மக்களின் சிந்தையே யன்றோ?

இந்நாளில் எத்துணையோ அரும்பெருஞ் செயல்கள் உலகில் நிகழ்தலைக் கண்கூடாகக் காண்கின்றோம். (Train) நீராவிப்பொறி, (Airroplane) வானெறிப்பொறி, (Ship) பொறிமரக்கலம், (Motor) தம்மியங்கிவண்டி, (Electric Light) மின்னொளிவிளக்கு முதலியவைகளைக் காண்கிறோம். இன்னும் எவ்வளவோ பெருஞ் செயல்களை மேனாட்டினர் மின்சாரத்தினாற் செய்கின்றனர் எனச் செவிமடுக்கின்றோம். அவைகளெல்லாம் சிந்தையின் செய்கையிற் றோன்றியனவலவோ? அவைகள் சிந்தையின் போாற்றலை விளக்குகின்றனவல்லவா? இவைபோன்ற செயல்களை ஒருகாலத்தில், மக்களால் ஆகாத செயல்களென்றும் தெய்வத்தால் நிகழக்கூடியன வென்றும் மக்கள் எண்ணி யிருந்தனரன்றோ?

இறந்தகாலத்தில் நிகழ்ந்த வினைகளை அணியணியாக எடுத்துக்காட்டும் ஆற்றலமைந்தது சிந்தை; நிகழ்காலத்தில் நடைபெறுஞ் செயல்களைக் கண்டறிவதும் சிந்தை; எதிர்காலத்தில் நிகழப்போவன இவையென்பதை எண்ணி யறிவதும் சிந்தை.

மக்கள் உறுதியான வினைகளைச் செய்துமுடிப்பதற்கும், உயர்வான பெரும்புகழைப் பெறுவதற்கும் முதற்காரணமா யிருப்பதும் சிந்தைதான்.

சிந்தையென்பது எவருக்கும் கட்டுப்பட்ட தொன்றன்று. அதனை எவராலும் கட்டுப்படுத்த வொண்ணாது. அஃது இயற்கை யிலே சுறுசுறுப்புடையது. இயற்கையமைப்பை மாற்றுதல் எளிதில் இயல்வ தொன்றன்று. இயற்கைத் தன்மை சிறிது போது முயற்சியால் மாற்றப்பெறினும், மீண்டும் இயற்கைத் தன்மைக்கே திரும்பிவிடும். சிந்தைக்கு ஒரு பொழுதும் சோர்வென்பதில்லை. அது நனவினும் வினையியற்றும்; கனவினும் தொழில் புரியும். நிலம், மதி, சுடர், கால் ஆகியவைகள் என் றேனும் சோர்வுற்றுச் சுழலாமல் நின்றுவிடுவதுண்டோ? அவை போலவே சிந்தையும். சிந்தையின் ஓயாத முயற்சியைப் பற்றிக் கூறாத கலை ஒன்றுமில்லை; உரைக்காத பெரியோர் ஒருவரு மிலர். கண்கண்ட உலக இன்பத்தை வெறுத்துக் கண்காணாத இன்பத்தைக் கருதிச் சிலர் சிந்தையைக் கட்டுப்படுத்த வேண்டு மெனப் பெரும்பாடுபட்டனர்; எவ்வளவோ முயன்றும் அவர்கள் கட்டுப்படுத்த இயலாதவராயினர். "சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற திறம்அரிது", "பேசாதிருக்கின்ற ஆனந்த நிட்டைக்கும், அறிவிலாப் பேதைக்கும் வெகுதூரமே" "பாவி மனக்குரங்காட்டம்" என்பன சிந்தையை யடக்கமுயன்ற வர்களின் உரைகளல்லவோ?

இயற்கையின் தன்மையை மாற்றுவதென்பது எளிதில் இயலாத செயலாகுமென முன்னமே மொழிந்தோம். குப்பையிற் கிடப்பினும் குன்றிமணி நிறம் மாறுவதுண்டோ? செம்பொன் னொளியைக் கருவண்ணமாக்க வியலுமா? இரும்பின் கருநிறத்தை நிலைத்த செம்பொன்னிறமாக்குதல் கூடுமோ? வேம்பின் இயற்கைச் சுவையை இனிய சுவையாக்க வொண்ணுமோ? புளியின் சுவை யைப் போக்கிவிடக்கூடுமோ? இவைகளெல்லாம் இயலாத செய லெனவுணர்ந்தும், அவற்றின் இயற்கைகளை மாற்றுவேனெனப்

புகுதல் வீண் வினையன்றோ? அவ்வா றியற்றல் வீண் காலப் போக்கும் வீண் முயற்சியுமாகும். அவைபோலவே சிந்தையின் இயல்பான கிளர்ச்சித் தன்மையை மாற்றிச் செயலின்றி அடக்கி வைக்கப் புகும் வேலையும் ஆகும்.

அங்ஙனமாயின், சிந்தையைத் தன்போக்கிற் போகவிட்டு விடுவதா? அவ்வாறு போகவிடுவோமாயின் நாம் எங்ஙனம் கட்டுப் பாடுடைய மக்களாக வாழமுடியும்? எவ்வாறு மன அமைதி யுடையவராக விருந்து வாழ்க்கை நடத்தமுடியும்? ஒழுக்கநெறியை மேற்கொள்ளவியலும்? என்று வினவலாம். அதற்கு நாம் கூறும் விடையாவது:— சிந்தையென்பது முருட்டுத் தன்மையுடைய தன்று. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று கூறுங் குணமுடையதன்று. வணங்காத இயல்புடையதன்று. தன் போக்கிற் போகும் தன்மை யுடையதன்று. அதை நமது விருப் பப்படி நடத்தலாம். நன்னெறியிற் போக விடுவோமாயின் அந் நெறியிற் சென்றுகொண்டிருக்கும். தீ நெறியை உணர்த்தி விடு வோமாயின் அவ்வழியிலும் தடையின்றிச் செல்லும். ஒரு நெறியிலும் புகாமல் அடக்கிவைப்பதுதான் இயலாத செயலே யன்றி, யாதேனும் ஒருவழியில் நிகழச் செய்தல் எவர்க்கும் எளிதிற் கைகூடும் செயலாகும்.

இத்தகைய சிந்தைக்கு உற்றுழி யுதவும் துணையொன்றுண்டு. அத்துணை, தீயின்கண் வெம்மைபோலும், நீரின்கண் தண்மை போலும், நிலத்தின்கண் அணுப்போலும் சிந்தையினிடத்திலே கரந்துறைவதாகும். அதனை நாடி யுணர்ந்து சிந்தையுடன் வெளிப் படையாகப் பழகுமாறு புரிதல்வேண்டும். அத்துணையின் பெயர்தான் பகுத்தறிவென்பது. அதுவே சிந்தையைச் சீரிய நெறியிற் செலுத்துதற்கு உற்ற துணையான உயர்வுடைப் பொருளாகும். சார்ந்ததன் வண்ணம் ஆகக்கூடிய உயரிய தன்மை சிந்தையின்பால் இயல்பிலே அமைந்து கிடக்கின்றது. அத்தன்மை வாய்ப்பது மிகவும் அரிதாகும். ஆதலால் எத்தகைய சிக்கலான செய்திகளாயினும் உண்மைத் தன்மையை எளிதிலுணரும் பகுத்தறிவைத் துணையாகப் பெறுமாயின், சிந்தைக்குப் போற்ற

லும், பெருஞ்சிறப்பும் ஓங்கி வளருமென்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று.

சிந்தைக்குச் சார்ந்ததன் வணணமாகுந் தன்மையுண்டென் பதை இரண்டோ ரெடுத்துக்காட்டுக்களால் விளக்குகின்றோம். உலகஅறிவு பெருச் சிறுமகாரை உற்றுநோக்குவோமாயின் மக்க ளியற்கையை அறிந்து மகிழலாம். அவர்களது சிந்தையின் தன்மையைப் பாருங்கள்! சிறு குழந்தைகள் ஒருபொருளை உற்று நோக்கிக் கொண்டிருப்பார்களாயின், அப்பொழுது வேறொரு செயலும் செய்யமாட்டார்கள்; மற்றொரு பொருளையும் பார்க்க மாட்டார்கள். ஓசைகளிருப்பினும் அவர்கள் செவியில் ஏரு. அதற்குக் காரணம், அவர்கள் சிந்தை, தாங்கள் பார்க்கின்ற பொருளிலே படிந்திருப்பதுதான். இளமையிற் கற்ற கல்வி எப்பொழுதும் மறக்கப்படுவதன்று. இளமையிற் கல்வி பசுமரத் தாணி. "இளமையிற்கல்" என்பது முன்னோர் மொழி. நாம் இளமையிற் செய்த் செய்கைகளை, இன்றும் கண்கூடாகக் காண் பதுபோல எண்ணியறிகின்றோம். இவையெல்லாம் சிந்தையின் இயற்கைத் தன்மையாகிய சார்ந்ததன் வண்ணத்தைக் காட்டுவ வாகும்.

சார்ந்ததன்வண்ணமாகுந் தன்மை சிந்தைக்கிருத்தலால், நம்து பகுத்தறிவைக்கொண்டு அதனை நல்வழியில் நடத்தி அதனு லுண்டாகும் பெரும்பயனைப் பெறமுயலவேண்டுவதே மக்களின் கடமையாகும். இதுவே இன்பமுறுதற்கு ஏற்ற நெறியாகும். சிந்தையை அடக்கிவைத்து அதனுற் பேரின்பம் பெறவேண்டு மென்று கூறிய ஆன்றோர்களின் கருத்து, சிந்தையைச் செய லின்றி வாளாவிருக்குமாறு செய்யவேண்டு மென்பதன்று. அதனை நல்வழியிற் செலுத்த வேண்டுமென்பதுதான். அதனுற் ருன், மக்கள் செய்யத்தக்க செயல்கள் இவை, செய்யத்தகாத செயல்கள் இவை எனக் கூறிவைத்திருக்கின்றனர். செய்யத் தக்கன வென்று கூறப்படும் செயல்கள் பெரும்பாலும் உலகி

லுள்ள நமது உடன்பிறப்பினராய மக்களுக்கு நன்மையை உண்டாக்கும் செயல்களாகவே காணப்படும். ஆகையால் ஒவ்வொரு மக்களும் சிந்தையாற் சிறப்படைவதற்குரிய வழியைத் தேட வேண்டும்.

ஒருவன் செல்வ மடைவதற்குச் சிந்தையே காரணமாகும். மிகுந்த பொருளைச் சேமித்து வைத்து அழகு பார்க்கவேண்டுமென்று விரும்புகின்றபோது அதன் மீது ஆவல் வளருகின்றது. அவ்வாசை நிறைவேறுதபோது சிந்தையில் நிறைவுண்டாகாது. சிந்தையில் நிறை வில்லாதபோது கலக்கமும், துன்பமும் சூழ்ந்து அல்லற்படுத்தும். சிந்தையின் நிறைவே செல்வமாகும். வறுமையென்று கூறப்படுவது சிந்தையின் நிறைவின்மையே யாகும். எத்துணை அரும் பெருஞ் செல்வங்களைப் பெற்றிருந்தாலும், "இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்" என்னும் பேராசையிருக்குமாயின் ஒருபோதும் சிந்தையில் அமைதி நிலவாது. சிந்தையிற் குறையில்லாதபோது கிளர்ச்சி முனைந்து நிற்கும். கிளர்ச்சியைப் போன்ற இன்பமும், மகிழ்ச்சியும் வேறொன்றில்லை. கிளர்ச்சி யுடையவர்களே இன்புறுதற்குரிய எல்லாப் பொருள்களையும் உடையராவர். இதனை "உடைய ரெனப்படுவது ஊக்கம்" என்பதும் விளக்கிநிற்கின்றது. ஆதலால் எப்பொழுதும் ஊக்கத்துடனும் பேராசை யின்றியும், மகிழ்ச்சியுடனும், கவலையின்றியும் வாழப் பயிலவேண்டும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்தன்றோ?

தொடரும்.